செய்தி வெளியீடு எண்.182 நாள்.03.04.2017

**திருவள்ளூர் மாவட்டம், நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீடுகட்டி வசிப்பவர்களுக்கு பட்டா வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~~~~~

தமிழக அரசால் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வருவாய் பின்தொடர் பணியின்கீழ் வருவாய் பதிவேடுகளில் இந்நாள் வரையிலான பதிவுகளை சரிசெய்து நில உரிமையாளர்களுக்கு ஆவணங்களின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டு வருகிறது, நத்தம் புறம்போக்கு வகைபாட்டில் வீடுகட்டி குடியிருந்து வரும் நபர்கள் அனைவருக்கும் நத்தம் பட்டா வழங்கப்படுகிறது. நத்தம் பட்டா பெறுவதற்கு பட்டா கோரும் நபர் வீடுகட்டி குடியிருக்க வேண்டும். விட்டு வரி ரசீது ஆவணமாக இணைக்கப்பட வேண்டும். இதுதவிர்த்து 30 ஆண்டுகள் வில்லங்கமற்ற பத்திர ஆவணங்கள் தொடர்பு ஆவணத்தை ஆதாரமாக காட்டி தங்களது பெயரில் நத்தம் பட்டா பெற்றுக்கொள்ளலாம்.

நகரப்பகுதிகளில் நன்செய், புன்செய், மானாவாரி வகைபாடுகளில் உள்ள பட்டா நிலங்களில் வீட்டுமனைகளாகப் பிரித்து வீடுகட்டி குடியிருப்போர்களுக்கும், டவுன் சர்வே பட்டா வழங்கப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீடுகட்டி வசிப்பவர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிவடையும் தருவாயில் உள்ளது. எனவே அதற்குள்ளாக பட்டா பெறாதவர்கள் உடனடியாக நத்தம் நிலவரிதிட்ட தனிவட்டாட்சியர் அம்பத்தூர் அவர்களை அணுகி பட்டா பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பட்டாக்களை இனிவரும் காலங்களில் முக்கிய ஆவணமாக கருதப்படும் என்பதால் இதுவரை பட்டா பெறாதவர்கள் தங்கள் சொத்துக்குரிய ஆவணங்களை நத்தம் நிலவரித்திட்ட வட்டாட்சியரிடம் ஆஜர்படுத்தி இத்திட்டத்தின் மூலம் புகைப்படத்துடன் கூடிய பட்டா பெற்று பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் திருவள்ளூர் மாவட்டத்திலடங்கிய,

1. திருவொற்றியூர் வட்டம் - கத்திவாக்கம் நகராட்சி (ம) திருவொற்றியூர் நகராட்சி
2. மாதவரம் வட்டம் - மாதவரம் நகராட்சி
3. திருவள்ளூர் வட்டம் - ஆவடி நகராட்சி
4. ஆவடி வட்டம் - ஆவடி நகராட்சி

ஆகிய நகராட்சி பகுதிகளில் நகர நிலவரி திட்டம் அந்தந்த தனிவட்டாட்சியர்கள் மூலம் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்கள் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக்கொண்டு உரிய ஆவணங்களை சம்மந்தப்பட்ட நகர நிலவரித்திட்ட தனிவட்டாட்சியரை அணுகி பட்டா பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~~~~~